மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், செட்டிகுளம் கிராம ஊராட்சி
தலைவர் மற்றும் செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.ம.பூங்கோதை

ந.க.எண்.3/2023-2024 நாள் : 16.03.2024

பொருள் : மனைப்பிரிவு – மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை உள்ளூர் திட்டக் குழுமப்பகுதி – மதுரை மாவட்டம் - மதுரை வடக்கு வட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சி – செட்டிகுளம் கிராமம் ரீசர்வே எண்.18/5C2B, ரீசர்வே எண்.18/6, ரீசர்வே எண்.15/2A2, ரீசர்வே எண்.18/5D3B, ஏக்கர் 1 செண்டு 55 பரப்பளவு உள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வரப்பெற்றது. – மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக…..

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.255 ஊரக வளர்ச்சி (C2)த் துறை நாள் :18.08.1997
2. அரசாணை (நிலை) எண்.71 ஊரக வளர்ச்சி (C2)த் துறை நாள் :16.06.2003
3. அரசாணை (நிலை) எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை நாள் : 04.05.2017
4. அரசாணை (நிலை) எண்.172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை நாள் : 13.10.2017
5. மனுதாரர் திரு.நரேந்திரக்குமார் மற்றும் மதிவாணன் கதவு எண்.1/174, பாரதியார் தெரு, செட்டிகுளம் கிராமம், திருமால்புரம் போஸ்ட், மதுரை-625014 அவர்களின் விண்ணப்பம் 01.03.2024
6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவண எண்:1334/2024 நாள் : 28.02.2024
7. உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மதுரை அவர்களின் கடிதம் : ந.க.எண். **ROC No.22303/2024/SWP/UR3LF6TC/2024/TCP,** நாள் : 01.03.2024

உத்தரவு :- மதுரை மாவட்டம் - மதுரை வடக்கு வட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், செட்டிகுளம் ஊராட்சி – செட்டிகுளம் கிராமம் ரீசர்வே எண்.18/5C2B, ரீசர்வே எண்.18/6, ரீசர்வே எண்.15/2A2, ரீசர்வே எண்.18/5D3B, ஏக்கர் 1 செண்டு 55 பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ம.உ.தி.கு.எண்.53/2024 என எண்ணிட்டு ஒப்புதலும் திட்ட அனுமதியும் அளிக்கப்பட்டு அதன் திட்ட அனுமதி எண்.61/2024-ம் என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகளுக்கான திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) பரப்பு

(a) மனைப்பிரிவு சாலை & மூலை முடுக்கு பரப்பு : 1580.51 ச.மீ இடம்

(b) பொது உபயோகம் (உள்ளாட்சி)க்கு : 24.12 ச.மீ இடம்

செட்டிகுளம் ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பொது உபயோகம் (TANGEDCO)-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 27 ச.மீ உள்ள இடத்தை (TANGEDCO)-க்கு தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தலைவர் / செயல் அலுவலர், செட்டிகுளம் ஊராட்சி எனும் பெயரில் (Transaction ID No.89e3962e-cad4-48ac-aabc-a4c6e597586e நாள் : 04.03.2024) மூலம் ரூ.36,000/- மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு செட்டிகுளம் ஊராட்சி மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி, செட்டிகுளம் கிராமம் - ரீசர்வே எண்.18/5C2B, ரீசர்வே எண்.18/6, ரீசர்வே எண்.15/2A2, ரீசர்வே எண்.18/5D3B, ஏக்கர் 1 செண்டு 55 பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள ஒதுக்கிய குடியிருப்பு மனைகள் 35 + (மனுதாரர் உபயோகம் 1) (மனை எண்கள் 1 முதல் 35 (மனுதாரர் உபயோகம் 1) உள்ள இடத்திற்கு செட்டிகுளம் ஊராட்சி மூலம் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

1-புத்தகம் 2024 ஆண்டில்..3309..
எண் ஆவணம்..22..தாள்களைக்
கொண்டது..8..வது தாள்

சார்பதிவாளர்
செட்டிகுளம் (மதுரை வடக்கு)

சார்பதிவாளர் அலுவலக முத்திரை
THE SEAL OF THE REGISTRAR OF CHETTIKULAM (MADURAI NORTH)
செட்டிகுளம் (மதுரை வடக்கு)

நிபந்தனைகள்

1. அரசாணைகளுக்கு உட்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இந்த தற்காலிக உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.
2. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை, கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின்படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
3. மனைப்பிரிவின் மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றை தலைவர் / செயல் அலுவலர் ஆய்வின்போது காட்டப்பட்டதில் மாற்றும் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி தங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.
4. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதிமொழி சான்று வழங்கப்பட வேண்டும்.
5. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரியவந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.
6. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் :13.10.2017-ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு **சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) அனைத்தும்** பத்திரபதிவு துறையில் **தலைவர் / செயல் அலுவலர், செட்டிகுளம் ஊராட்சி** என உள்ளாட்சியின் அபிவிருத்திக்கு பதிவு செய்து தரவேண்டும்.
7. பெறப்பட்ட ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு உள்ளாட்சி விதிகளின்படி உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
8. மனைகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படக்கூடாது.
9. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டறியப்பட்டால் திட்ட அனுமதி இரத்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் உரிய சட்டரீதியான நடவடிக்கை தங்கள் மீது எடுக்கப்படும்.
10. காலிமனைப்பிரிவு சுற்றிலும் மரக்கன்றுகள் நடப்படவேண்டும்.
11. மனைப்பிரிவுக்குள் அமையும் தெருக்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி, 47(11)-ன்படி மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால்வசதி, கழிவுநீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும். உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத் தொகையினை மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி உட்கட்டமைப்பு வசதிகள் மனுதாரால் முழுமையாக செய்த பின்னரே கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படும்.
12. மேற்காணும் நிபந்தனைகள் மீறினால் இவ்வனுமதி ரத்து செய்யப்படும்.

பெறுநர்
திரு.நரேந்திரக்குமார் மற்றும் திரு.மதிவாணன்,
கதவு எண்.1/174, பாரதியார் தெரு,
செட்டிகுளம் கிராமம், திருமால்புரம் போஸ்ட்,
மதுரை-625014

1-புத்தகம் 2024 ஆண்டில்.....3309.....
எண் ஆவணம்.....22.....தாள்களைக்
கொண்டது.....9.....வது தாள்

சார்பதிவாளர்
செட்டிகுளம் (மதுரை வடக்கு)

THE SEAL OF THE REGISTRAR OF CHETTIKULAM (MADURAI NORTH)